## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்- 2007-2008 ஆண்டில் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட, தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளில் ஆசிரியர்கள் மற்றும் சமையலர்கள் தங்குவதற்கு வாடகையற்ற தனித் தனி குடியிருப்பில்லம் ரூபாய் 100.00 இலட்சம் செலவில் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது -ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

## ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல (பமே-2) துறை

அரசாணை(நிலை) எண். 104
நாள்: 30.8.2007

படிக்கப்பட்டது:

பழங்குடியினர் நல ஆணையரின் கடித ந.க.எண்.பமே/ஆ1/1753/07 நாள் 12.6.2007.

........

ஆணை:-

2007-08 மானியக் கோரிக்கை விவாதத்தின் போது சட்டப் பேரவையில் ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்கள், கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:

> “2007-2008ம் ஆண்டில் 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்க/நடுநிலைப் பள்ளிகளில் மொத்தம் ரூபாய் 100.00 இலட்சம் செலவில் ஆசிரியர்கள் மற்றும் சமையலர்கள் தங்குவதற்கு வாடகையற்ற குடியிருப்பில்லங்கள் கட்டப்படும்”

2.மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பழங்குடியினர் நல ஆணையர், 50 ஆசிரியர்கள் மற்றும் 50 சமையலர்கள் தங்குவதற்கு தனித்தனியாக குடியிருப்புகள் கட்ட போதுமான இட வசதி உள்ள 50 அரசு

பழங்குடியினர் உண்டு உறைவிட தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளின் பட்டியலை மாவட்ட வாரியாக பின்வருமாறு அரசுக்கு அனுப்பியுள்ளார்:-

| வரிசை எண். | மாவட்டத்தின் பெயர் | பழங்குடியினர் தொடக்க பள்ளிகள் |
|---|---|---|
| 1. | கோயம்புத்துார் | 1.சிங்குபதி<br>2.பெருமாள்புதுார்<br>3.ஆணைக்கட்டி<br>4.அமராவதிநகர்<br>5திருமூர்த்திமலை |
| 2. | நாமக்கல் | 6கீமூர்<br>7மேலுார்<br>8கெடமலை<br>9.பள்ளிக்காட்டுப்பட்டி<br>10.செங்கரை<br>11.மலையாளப்பட்டி |
| 3 | திருச்சிராப்பள்ளி | 12.கீழ்க்கரை<br>13.சிலையூர்<br>14.வாலையூர்<br>15.குறிச்சி<br>16.மணலோடை<br>17.ஏரிக்காடு<br>18.நேசக்குளம் |
| 4 | திண்டுக்கல் | 19. நல்லுார் காடு வளவு<br>20.கொரக்கொம்பு<br>21.மூலையாறு |
| 5. | சேலம் | 22வெள்ளிக்கவுண்டனுார்<br>23.தாழ்கோவிலுார்<br>24கீழ்த்தொம்மை<br>25.முயல்கரடு |
| 6 | திருவண்ணாமலை | 26. பாலபிரியம்பட்டி |
| 7 | விழுப்புரம் | 27.வஞ்சிக்குடி<br>28மேல்தொரடிப்பட்டு<br>29கோமுகி அனை<br>30.மணியார்பாளையம் |

| | | |
|---|---|---|
| 8 | தருமபுரி | 31.மல்லுத்து<br>32.தோல்தூக்கி<br>33. நடுப்பட்டி |
| 9 | வேலூர் | 34அத்தனாவூர்<br>35. நடுக்குப்பம். |
| 10 | கோயம்புத்தூர் | 36. பாலமலை |
| 11 | பெரம்பலூர் | 37. மலையாளப்பட்டி |
| 12 | திருவண்ணாமலை | 38ஆட்டியனூர்<br>39.கோவிலாண்டூர்<br>பழங்குடியினர் நடுநிலை பள்ளிகள் |
| 13 | சேலம் | 40.குன்னூர்<br>41.வாழவந்தி<br>42.செம்மநத்தம்<br>43.கொடுங்கல்<br>44.இராமன்பட்டி<br>45.அடிமலைப்புதுார் |
| 14 | விழுப்புரம் | 46சங்கராபுரம்<br>47.கிளாக்காடு<br>48.மூலக்காடு |
| 15 | தருமபுரி | 49.எஸ்.தாதம்பட்டி<br>50.வாச்சாத்தி |

3. மேற்கூறப்பட்ட பள்ளிகளில், ஆசிரியர் மற்றும் சமையலர் குடியிருப்புகள் தனித்தனியே கட்ட மொத்தம் ரூபாய் 100 இலட்சத்திற்கான மதிப்பீடு தாட்கோவிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. எனவே, 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் மற்றும் சமையலர் குடியிருப்புகள் ஆகியவற்றை ரூபாய் 100.00 இலட்சம் செலவினத்தில் கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதலையும், கட்டுமானப் பணியை தாட்கோ மூலம் மேற்கொள்ளுவதற்கான ஆணையினையும் வழங்கிடுமாறு பழங்குடியினர் நல ஆணையர் கோரியுள்ளார்.

4. பழங்குடியினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்தது. மேலே பத்தி 2-ல் குறிப்பிடப்பட்டுள்ள 50 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 2007-2008ம் ஆண்டு 50 ஆசிரியர்கள் மற்றும் 50 சமையலர்கள் தங்குவதற்கு தனித்தனியாக வாடகையற்ற குடியிருப்பு இல்லங்கள் கட்டுவதற்காக ரூ. 100.00 லட்சம் செலவினத்திற்கு (ரூபாய் நூறு லட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேலும், மேற்குறிப்பிட்ட குடியிருப்புகள் கட்டுவதற்கு தாட்கோ அனுப்பியுள்ள மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதலும் செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இச்செலவினம் கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும்:- 4225 ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்டவர் நலன்
குறித்த மூலதன செலவு

02 பழங்குடியினர் நலன்
277 கல்வி பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்

02 மாநில திட்டம்
277 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் சமையலர்களுக்கு குடியிருப்பு கட்டுதல்

16 பெரும் பணிகள் (DPC 4225 02 277 JY 1604)

6. மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பிற்கு பழங்குடியினர் நல ஆணையர்அவர்கள் மதிப்பீடு, கணக்கு, நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரி ஆவார். கணக்குகளில் மேற்சொன்ன புதிய கணக்கு தலைப்பினை தொடங்குமாறு சம்மந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர் மற்றும் கருவூல அலுவலர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. இது ஒரு ''புதுப்பணி'' குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு செலவு*1) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து

தேவையான தொகைக்கு விண்ணப்பத்தினை உரிய படிவத்தில் இவ்வரசாணையின் நகலுடன் நிதி(வரவு செலவு-1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி பழங்குடியினர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. மேலே பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையைப் பெற்று ஆசிரியர் மற்றும் சமையலர் குடியிருப்பு கட்டுவது தொடர்பாக மேலாண்மை இயக்குநர் தாட்கோவுடன் கலந்தாலோசித்து உரிய நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பழங்குடியினர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார். மேலும், குடியிருப்புகள் கட்டுவதற்கு செலவிட.படும் தொகை ரூபாய் 100.00 லட்சத்திற்கு மிகாமல் இருக்குமாறு உறுதி செய்து கொள்ளவும் பழங்குடியினர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

9. மேலாண்மை இயக்குநர், தாட்கோவுடன் கலந்தாலோசித்து ஒப்பளிக்கப்பட்ட அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் ஆசிரியர்கள். மற்றும் சமையலர்கள் குடியிருப்பில்லம் கட்டுவதற்கான ஒரு கால அட்டவணை குறித்தும், பணி ஆரம்பிக்கப்பட்ட, முடிக்கப்பட்ட விவரம் மற்றும் கட்டடம் பழங்குடியினர் நல துறைக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான விபரங்கள் போன்றவற்றை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் பழங்குடியினர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

10. இந்த குடியிருப்பில்ல கட்டுமானப் பணி முன்னேற்றம் குறித்து காலாண்டு அறிக்கை மற்றும் பத்தி 4ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை பயன்படுத்தியவற்றிற்கான பயன்பாட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை குறிப்பிட்ட காலகெடுவிற்குள் அரசுக்கு அனுப்புமாறு பழங்குடியினர் நல ஆணையர் கேட்டுக் கொள்கிறார்.

11. இவ்வரசாணை நிதி துறையின் அலுவல் சார்பற்ற எண்.55357/நிதி (ஆதிஂபந) நாள் 28.08.2007ல் பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் பேரேடு எண்.809 (எண்ணூற்று ஒன்பது)

சி.முத்துக்குமாரசாமி,

அரசு செயலாளர்

(ஆளுநரின் ஆணைப்படி)

பெறுநர்
ஆணையர், பழங்குடியினர் நலம், சென்னை-5
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101
மாவட்ட ஆட்சியர்கள்,
கோயம்புத்தூர்,நாமக்கல்,திருச்சி,திண்டுக்கல்,சேலம்,
திருவண்ணாமலை,பெரம்பலூர்,விழுப்புரம்,தருமபுரி,வேலூர்.
மாநில கணக்காயர், சென்னை-18/35/6
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5
நகல்
நிதி (ஆதி(ம)பந) (வரவு செலவு பொது-ஐ/வரவு செலவு பொது ஐஐ ) துறை, சென்னை-9
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-9

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)

பிரிவு அலுவலர்

ஆதி(ம)பந(பமே-2)துறை

சுருக்கம்

ஆதி(ம)பந-பந-விடுதிகள்-வாடகை கட்டிடங்களில் இயங்கும் விடுதிகளுக்கு *அரசு கட்டிடம் கட்டுவது-2007-2008ம் ஆண்டில் 5 பழங்குடியினர் மாணவ/மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கு ரூபாய் 200.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து - ஆணைகள்வெளியிடப்படுகின்றன.

ஆதி(ம)பந (பமே-2) துறை

அரசாணை(நிலை) எண்.
நாள்:

படிக்கப்பட்டது:

பழங்குடியினர் நல ஆணையரின் கடித ந.க.எண்.பமே/ஆ1/ 862/07 நாள் 12.6.2007 மற்றும் 27.6.2007 நாளிட்ட கடிதம்.

////////////////

ஆணை:-

2007-2008ம் ஆண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் மான்ய கோரிக்கையின் போது ஆதிதிராவிடர் நல அமைச்சர் அவர்கள் 2007-2008ம் ஆண்டில் வாடகை கட்டிடங்களில் எவ்வித அடிப்படை வசதியின்றி இயங்கி வரும் 5 பழங்குடியினர் மாணவர்/மாணவியர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் மொத்தம் ரூபாய் 200.00 இலட்சம் செலவில் கட்டப்படும்'' என்ற அறிவிப்பினை செய்துள்ளார்கள்.

2.மேலே படிக்கப்பட்ட கடிதங்களில் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் பழங்குடியினர் மாணவர்களுக்கென 22 விடுதிகளும் பழங்குடியினர் மாணவிகளுக்கென 15 விடுதிகளும் ஆக மொத்தம் 37 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன எனவும் இவற்றில் கீழ்க்கண்ட 10 விடுதிகள் வாடகை கட்டிடங்களில் (மாணவியர் விடுதிகள் 6 + மாணவர் விடுதிகள் 4) செயல்பட்டுவருகின்றது எனவும் அப்பட்டியலை மாவட்ட வாரியாக பின்வருமாறு அரசுக்கு அனுப்பியுள்ளார்:-

வ.எண் மாவட்டம் விடுதி விவரம்

1. காஞ்சிபுரம் 1. அரசு பழங்குடியினர் மாணவர் விடுதி, மதுராந்தகம்.

2. சேலம் 2.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி,சேலம்.

3. திருச்சிராப்பள்ளி 3.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி, டாப்செங்காட்டுப்பட்டி.

4. திருவண்ணாமலை 4.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி,நம்பியப்பட்டு.

5. ஈரோடு 5.அரசு பழங்குடியினர் மாணவர் விடுதி,அந்தியூர்.6.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி,சத்தியமங்கலம்.

6. தருமபுரி 7.அரசு பழங்குடியினர் மாணவர் விடுதி,மாராண்டஉறள்ளி,8.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி,தருமபுரி.

7. கிருஷ்ணகிரி 9.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி, தளி.

8. நாமக்கல் 10.அரசு பழங்குடியினர் மாணவர் விடுதி, நாமக்கல்

3. மேற்படி 10 பழங்குடியினர் மாணவ/ மாணவியர் விடுதிகளில் பின்வரும் 5 விடுதிகளுக்கு புதிய கட்டிடம் கட்டித்தர இடம் தேர்வு செய்யப்பட்டு தாட்கோ நிறுவத்திடம் ஒப்படை செய்யப்பட்டுள்ளதாக சம்பந்தப்பட்ட ஆதிதிராவிட்ர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

விடுதி மாவட்டம்

1.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி, சேலம். சேலம்

2.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி, டாப்செங்காட்டுப்பட்டி திருச்சி

3.அரசு பழங்குடியினர் மாணவர் விடுதி, அந்தியூர் ஈரோடு

4.அரசு பழங்குடியினர் மாணவர் விடுதி, நாமக்கல் நாமக்கல்

5.அரசு பழங்குடியினர் மாணவியர் விடுதி, மதிகோண்பாளையம். தருமபுரி

4. மேற்கூறப்பட்ட 5 பழங்குடியினர் மாணவ/மாணவியர் விடுதிகளுக்கு புதிய கட்டிடம் கட்ட தலா ரூபாய் 40.00 இலட்சத்திற்கான மதிப்பிடுகளை தாட்கோவிடம் இருந்து பெறப்பட்டுள்ளது. எனவே 5 பழங்குடியினர் மாணவ/மாணவியர் விடுதி கட்ட ரூபாய் 200.00 இலட்சம் செலவினத்தில் கட்டுவதற்கான நிர்வாக ஒப்புதலையும் கட்டுமான பணியை தாட்கோ மூலம் மேற்கொள்ளுவதற்கு ஆணையையும் வழங்கிடுமாறு பழங்குடியினர் நல ஆணையர் கேட்டுக்கொண்டுள்ளார்.

5. பழங்குடியினர் நல ஆணையரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்தது. மேலே பத்தி 3ல் குறிப்பிடப்பட்டுள்ள வாடகை கட்டிடங்களில் இயங்கிவரும் 5 பழங்குடியினர் மாணவ/மாணவியர் விடுதிகள் 2007-2008ல் கட்டுவதற்கு விடுதி ஒன்றுக்கு ரூபாய் 40.00 லட்சம் வீதம் 5 விடுதிகளுக்கு 200.00 இலட்சம் ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது. மேற் குறிப்பிடப்பட்ட ஐந்து

மாணவ/மாணவியர் விடுதிகள் ரூபாய் 200.00 இலட்சம் செலவில் மட்டும் திட்ட மதிப்பீட்டிற்கும் நிர்வாக அனுமதி வழங்கப்படுகிறது. இச்செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புகளில் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

6.இது ஒரு ‘‘புதுதுணைப்பணி’’ குறித்த செலவினமாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி முதற்கண் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து இச்செலவினம் மேற்கொள்ளப்படும். இதற்கான முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வரவு செலவு * 1 ) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து தேவையான தொகைக்கு விண்ணப்பத்தினை உரிய படிவித்தில் இவ் அரசாணையின் நகலுடன் நிதி(வரவு செலவு-1) துறைக்கு அனுப்பி வைக்கும்படி பழங்குடியினர் நல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

7. மேலும், இச்செலவினத்திற்கான தொகை ரூபாய் 200.00 இலட்சத்தைப் பெற்று தாட்கோ மேலாண்மை இயக்குநருக்கு அளிக்க பழங்குடியினர் நல ஆணையருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8. ஒப்பளிக்கப்பட்ட அரசு பழங்குடியினர் மாணவர்/மாணவியர் விடுதிகள் கட்டுவதற்கான ஒரு கால அட்டவணையை, தாட்கோ

மேலாண்மை இயக்குநருடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்க, பழங்குடியினர் நல ஆணையருக்கு ஆணை வழங்கப்படுகிறது. பணி ஆரம்பிக்கப்பட்ட, முடிக்கப்பட்ட மற்றும் கட்டடம் பழங்குடியினர் நல துறைக்கு ஒப்படைக்கப்பட்டதற்கான விபரங்கள் போன்றவற்றை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு பழங்குடியினர் நல ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

9.இந்த புதிய விடுதிகள் கட்டுமானப் பணி முன்னேற்றம் குறித்து காலாண்டு அறிக்கை மற்றும் உரிய கட்டிடம் கட்டி முடித்த பின்பு முற்று அறிக்கை மற்றும் பயன்பாட்டுச் சான்றிதழ் ஆகியவற்றை அரசுக்கு அனுப்பும்படி மேலாண்மை இயக்குநர், தாட்கோ அறிவுறுத்தப்படுகிறார்.

11. இவ்வரசாணை நிதித் துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.
நாள்
பெற்று வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு (ஹளூடு ) எண்.

பெறுநர்
ஆணையர், பழங்குடியினர் நலம், சென்னை-5
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-101
மாவட்ட ஆட்சியர்கள், திருச்சி,நாமக்கல்,ஈரோடு,சேலம்,திருவண்ணாமலை.
மாநில கணக்காயர், சென்னை-18/35/6
சம்பள கணக்கு அலுவலர், சென்னை-5
நகல்
நிதி (ஆதி(ம)பந) (வரவு செலவு-ஐ ) துறை,சென்னை-9
ஆதிதிராவிடர் நல அமைச்சரின் நேர்முக உதவியாளர்,சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9

செயலர் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம், சென்னை-9